'வாழை' திரைப்படத்தினை சான்பிரான்சிஸ்கோவில் கண்டேன்!

# ஆயிரம் வாழைத்தார்களை நமது இதயத்தில் ஏற்றி விட்டார் மாரி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து - பாராட்டு!

சான்பிரான்சிஸ்கோ, செப்.3-

திரைப்பட இயக்குனர் மாரி செல்வராஜின் 'வாழை' திரைப்படத்தினை பாராட்டி, முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், வாழை திரைப்படத்தினை சான்பிரான்சிஸ்கோவில் கண்டேன், ஆயிரம் வாழைத்தார்களை நமது இதயத்தில் ஏற்றி விட்டார் மாரி. படைப்பாளி மாரி செல்வராஜிக்கு வாழ்த்துகள் என்று குறிப்பிட்டுள்ளார்.

திரைப்பட இயக்குநர் மாரி செல்வராஜின் "வாழை" திரைப் படத்தினை பாராட்டி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவு வருமாறு:-




**உண்மைச் சம்பவத்தின் அடிப் படையில் உழைக்கும் மக்களின் வாழ்வியலையும் அவர்களின் வலியையும் பேசும் "வாழை" திரைப்படத்தினை சான் பிரான் சிஸ்கோவில் கண்டேன். படைப் பாளி மாரி செல்வராஜ் அவர் களுக்கு அன்பின் வாழ்த்துகள்!**

**பசியுடன் சிவனணைந்தான் தவித்தபோது, ஆயிரம் வாழைத் தார்களை நமது இதயத்தில் ஏற்றிவிட்டார் மாரி!**

**பசிக்கொடுமையை எந்தச் சிவனணைந்தானும் எதிர் கொள்ளக் கூடாதென முதல மைச்சரின் காலை உணவுத் திட்டம் உருவாக்கியதில் மகிழ்ச்சி பெற்றேன். காயங் கள் ஆறும் என்ற நம்பிக்கை யுடன் மாற்றங்களை நோக்கிப் பயணத்தைத் தொடர்வோம்!**

**தொடர்ந்து வெற்றிப் படங் களை எடுத்துவரும் மாரி செல்வ ராஜ் அவர்களுக்கு மீண்டும் வாழ்த்துகள்!**

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தமது வலைதளப் பதிவில் குறிப் பிட்டுள்ளார்.

சென்னையில் 'பார்முலா 4 கார் பந்தயம்!'

# தமிழ்நாடு விளையாட்டுத் துறையிலும் முக்கியதொரு இடத்தை பிடிக்கிறது!

## 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் பாராட்டு!

சென்னை, செப். 3 -

சென்னையில் 'பார் முலா 4 கார் பந்தயம்' வெற்றிகரமாக நடத்தப் பட்டுள்ளது. இன்று விளையாட்டுத் துறையிலும் தமிழ்நாடு முக்கிய தொரு இடத்தைப் பிடிக்கத் தொடங்கியுள்ளது என்று 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் பாராட்டு தெரிவிக்கப்பட்டுள்ளது.



தினகரன்

செப்டம்பர் 2, 2024 திங்கட்கிழமை

விளையாட்டின் பொற்காலம்

இந்தியாவிலேயே கல்வி, மருத்துவம் என்றால் தமிழ்நாடு முதன்மை மாநிலமாக திகழ்கிறது. ஆனால் இன்று விளையாட்டுத் துறையிலும் தமிழ்நாடு முக்கியதொரு இடத்தை பிடிக்கத் தொடங்கியுள்ளது. தமிழ்நாடு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சராக உதயநிதி ஸ்டாலின் பொறுப்பேற்ற நாளில் இருந்தே, விளையாட்டுத் துறையில் என்னென்ன புதுமைகள் படைக்க முடியுமோ அனைத்தையும் செயல்படுத்தி வருகிறார். மும்பையிலும், டெல்லியிலுமே நடக்கக் கூடிய பல்வேறு விளையாட்டு போட்டிகள் இன்று தமிழகத்தை எட்டிப் பார்க்கத் தொடங்கியுள்ளன. தமிழ்நாட்டில் இருந்து பல்வேறு விளையாட்டு வீரர்கள், தங்கள் திறமைகள் மிளிர உலக அரங்கின் கதவுகளை தட்டத் தொடங்கியுள்ளனர்.

இதுகுறித்து 02.09.2024 தேதிய 'தினகரன்' தலை யங்கத்தில் கூறியிருப்ப தாவது:-

இந்தியாவிலேயே கல்வி, மருத்துவம் என் றால் தமிழ்நாடு முதன்மை மாநிலமாக திகழ்கிறது. ஆனால் இன்று விளை யாட்டுத் துறையிலும் தமிழ்நாடு முக்கியதொரு இடத்தை பிடிக்கத் தொடங்கியுள்ளது. தமிழ் நாடு இளைஞர் நலன் மற் றும் விளையாட்டுத்துறை அமைச்சராக உதயநிதி ஸ்டாலின் பொறுப்பேற்ற நாளில் இருந்தே, விளை யாட்டுத் துறையில் என் னென்ன புதுமைகள் படைக்க முடியுமோ அனைத்தையும் செயல்ப டுத்தி வருகிறார். மும்பை யிலும், டெல்லியிலுமே நடக்கக் கூடிய பல்வேறு விளையாட்டு போட்டி கள் இன்று தமிழகத்தை எட்டிப் பார்க்கத் தொடங் கியுள்ளன. தமிழ்நாட்டில் இருந்து பல்வேறு விளை யாட்டு வீரர்கள், தங்கள் திறமைகள் மிளிர உலக அரங்கின் கதவுகளை தட் டத் தொடங்கியுள்ளனர்.

கடந்த 2021ம் ஆண்டு தமிழ்நாடு முதல் அமைச்ச ராக மு.க.ஸ்டாலின் பொறுப்பேற்ற நாளில் இருந்தே விளையாட்டுத் துறையின் பொற்காலமும் தொடங்கிவிட்டது. அந்த ஆண்டு முதலே தேசிய அளவிலும், சர்வதேச தரத் திலும் பல்வேறு விளை யாட்டுப் போட்டிகள் சென்னையில் நடக்கத் தொடங்கின. குறைந்த கால அவகாசத்தில் சர்வ தேச செஸ் ஒலிம்பியாட் போட்டிகளை சென்னை யில் நடத்தி தமிழ்நாடு அரசு சாதனை படைத்தது. அதன் தொடர்ச்சியாக விளையாட்டுத்துறைக்கு முத்தாய்ப்பாக 2023ம் ஆண்டுக்கான கேலோ இந் தியா விளையாட்டுப் போட்டிகள் சென்னை யில் அரங்கேறின.

விளையாட்டுத் துறை அமைச்சரின் சீரிய முயற்சி யால் ஆசிய ஹாக்கிப் போட்டிகள், ஸ்குவாஷ் உலகக் கோப்பை உள் ளிட்ட பல தொடர்கள் நம் மண்ணில் வெற்றிகர மாக நடத்திக் காட்டப் பட்டன. இப்போது தெற் காசியாவிலேயே முதன்முறையாக சென் னையில் 'பார்முலா 4 கார் பந்தயம்' நடத்தப்பட்டு வருகிறது. பொதுவாக பார்முலா கார் பந்தயங் கள் வெளிநாடுகளில் பிரப லம். காரை ஓட்ட வசதி யாக சாலைகள் மற்றும் அதிநவீன கார்கள் காரண மாக வெளிநாடுகளில் இப் பந்தயப் போட்டிகளை காண வெகுஜன ரசிகர்கள் கூட்டமும் உண்டு. இத்த கைய பார்முலா பந்தயங் களை நாம் என்றாவது நேரில் காண்போமோ என் கிற சென்னை வாசிகளின் கனவுகளை நனவாக்கும் வகையில் தற்போது இப் போட்டிகள் சென்னையி லேயே நடத்தப்பட்டு வரு கிறது.

பார்முலா 4 காரின் வேகம் மணிக்கு 210 முதல் 240 கிமீ வரை வேகமாக இருப்பதோடு, ஒரு காரின் ஆரம்ப விலையே ரூ.60 லட்சத்தை தாண்டி காணப்படும். இந்த கார் களுக்கு குறைந்தபட்சம் 1600 சிசி திறன் கொண்ட இன்ஜின்களே பயன்படுத் தப்படும். இப்போட்டி களை நடத்தக் கூட தனித் தகுதிகள் வேண்டும். தற்போது தெற்காசியா வின் முதல் இரவு பார் முலா 4 பந்தயம், சென் னையில் நடப்பது தமிழ்நாட்டிற்கே பெரு மையாகும். தமிழ்நாடு விளையாட்டு மேம் பாட்டு ஆணையத்தோடு இணைந்து, ரேசிங் புரோ மெஷன்ஸ் நிறுவனமும் இப்போட்டியை நம் கண் முன்னே அரங்கேற்றி வரு கின்றன. பல்வேறு சவால் களை தாண்டி இக்கார் பந்தயம், சென்னையில் நடப்பது ஆயிரக்கணக் கான ரசிகர்கள் மத்தியில் உற்சாகத்தை ஏற்படுத்தி யுள்ளது.

இந்த பந்தயத்துக்காக தீவுத்திடல், போர் நினைவு சின்னம், நேப்பியர் பாலம், சுவாமி சிவானந்தா சாலை, அண்ணா சாலை ஆகியவற்றில் 3.5 கிமீ தூரம் சுற்றளவில் சர்கியூட் அமைக்கப்பட்டு உள்ளது. தெற்கு ஆசியாவிலே மிக நீளமான சாலை சர்கியூட் இது என்பதும் சிறப்பா கும். இப்போட்டியில் பல மாநில அணிகள் மட்டு மின்றி, போர்ச்சுக்கல், இங் கிலாந்து, ஸ்பெயின், டென் மார்க், ஆஸ்திரே லியா போன்ற வெளி நாட்டு வீரர்களும் கலந்து கொள்வது உலக அரங்கின் பார்வை சென்னையை நோக்கி திரும்பும். 'தமிழ் நாடு விளையாட்டுத்துறை யில் தனி இடம் பதிக்கும்' என்கிற அமைச்சர் உதய நிதி ஸ்டாலினின் உறுதி மொழியை இத்தகைய போட்டிகள் மெய்ப்பிப் பதாக உள்ளன.

இவ்வாறு தலையங்கத் தில் கூறப்பட்டுள்ளது.

விவசாயிகளை ஊக்குவிக்க - முத்தமிழறிஞர் கலைஞர் கொண்டுவந்த

# 'உழவர் சந்தை' திட்டம் 25வது ஆண்டு நிறைவு!

## நவம்பரில் சிறந்த விவசாயிகளுக்கு பரிசு!

சென்னை, செப்.3-

விவசாயத்தையும், விவசாயிகளையும் ஊக்குவிக்க முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் கொண்டு வந்த உழவர் சந்தை திட்டம் 25வது ஆண்டை நிறைவு செய் கிறது. நவம்பரில் சிறந்த விவசாயிக்கு பரிசு வழங்கப்பட இருக்கிறது.

விவசாயத்தை மேம்படுத்தும் வகையில், இடைத்தரகர்கள் இல்லாமல் நேரடியாக விவசாயிகள் காய்கறி விற்பனை செய்வதற் காக முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் கொண்டு வந்த ஒரு மகத்தான திட் டம் தான் 'உழவர் சந்தை'. 1999ம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட இந்த உழவர் சந்தை திட்டம் தற் போது 25 ஆண்டுகளை நிறைவு செய்கிறது.

வரும் நவம்பர் மாதம் தனது வெள்ளி விழா ஆண்டை நிறைவு செய்து, 26வது ஆண்டில் அடியெ டுத்து வைக்க இருக்கிறது. 1996ம் ஆண்டு தி.மு.க. ஆட்சி அமைந்த போதுபல்வேறுகிராமங்கள்தோறும் மினி பஸ் உள்ளிட்ட பல்வேறு திட் டங்கள் கொண்டுவரப்பட்டது. அதில் முக்கியமானது, இந்த உழவர் சந்தை.

1998ல் விவசாய உற்பத்தி சந் தைப்படுத்துதல் வரி மீளாய்வுக்குழு என்ற குழு ஒன்றை கலைஞர் அவர்கள் அமைத்தார். அந்தக் குழு வின் உறுப்பினராக தமிழ்நாடு வர்த்தக மற்றும் தொழில்துறைகளின் சங் கத்தின் அப்போதைய தலைவர் எஸ்.ரத்தி னவேலு இருந்தார். பல்வேறு மாநிலங் களில், விவசாயிகள் எவ்வாறு தங்களின் விளைபொருட்களை விற்பனை செய்கிறார் கள் என்பதை அவர் ஆய்வு செய்தார்.

அதனை குறிப்பாக எடுத்து, சண்டிகரில் விவசாயிகள்தங்களின்வயல்களில்அமர்ந்து கொண்டு, விளைபொருட்களை நேரடியாக மக்களுக்கு விற்பனை செய்வதைப் பற்றி முதலமைச்சராக இருந்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களிடம் கூறினார். 'இதை ஆய்வறிக்கையாக தயாரிக்க கூறிய கலை ஞர் அவர்கள் அதனை தமிழகத்தில் திட்ட மாக செயல்படுத்த நினைத்தார்.

### மதுரையில் தொடக்கம்

ஆய்வறிக்கை கிடைத்த அன்றே உழவர் சந்தை திட்டத்தை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் கொண்டுவந்தார். முதல் உழவர் சந்தையை மதுரை, அண்ணாநகரில் 1999ம் ஆண்டு நவம்பர் 14ந்தேதி கொண்டு வந் தார். 2000ம் ஆண்டுக்குள் தமிழகம் முழு வதும் 103 உழவர் சந்தைகளை ஏற்படுத்தி னார். இதனால் விவசாயிகள் நேரடியாக உழவர் சந்தைகளுக்குச் சென்று தாங்கள் விளைவித்த காய்கறிகள், பயிர்களை விற்று, லாபம் பார்த்தனர்.

அதன் பிறகு ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பிறகு இந்த திட்டத்தில் தொய்வு ஏற்பட்டது. மீண் டும் கழக ஆட்சி ஏற்பட்டபோது உழவர் சந்தைகள் புத்துயிர் பெற்றது.

மேலும்உழவர்சந்தைகள்திறக்கப்பட்டன. தொடர்ந்து, ஏற்றத்தையும், இறக்கத்தையும் சந்தித்து இன்றைக்கு 25 ஆண்டை நிறைவு செய்ய உள்ளது.

### பரிசுகள் வழங்கப்படுகிறது!

இந்த திட்டம் தற்போது முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆட்சியில் வேக மெடுத் துள்ளது. 20க்கும் மேற்பட்ட உழவர் சந்தைகள் புதுப்பிக்கப்பட்டு வருகிறது. தற்போது தமிழகம் முழு வதும் 192 உழவர் சந்தைகள் இயங்கி வருகிறது. வெள்ளி விழா ஆண்டின் நிறைவு பகுதியில் இருக் கும் உழவர்சந்தைகளை பயன்ப டுத்தும் விவசாயி களை ஊக்குவிக் கவும், விவசாயத்தின் மீது மக்க ளுக்கு மேலும் விழிப்புணர்வை ஏற்படுத்தவும்தமிழக அரசு திட்டமிட் டுள்ளது.

அந்தவகையில் வெள்ளி விழா நிறைவு கொண்டாட்டங்களுக்கு தமிழக அரசு, உழவர்நலன் மற் றும் வேளாண் துறை தயாராகி வருகிறது. உழவர் சந்தை25 என்ற தலைப்பில் மலர் வெளியிட வேளாண்மைத்துறை திட்டமிட்டு இருக்கிறது.

மேலும் நீண்ட காலமாக உழவர் சந்தை யில் பணியாற்றிய ஊழியர்கள், சிறப்பான வருவாயை எட்டி சாதனை படைத்த விவசா யிகளுக்கு பரிசுகள் வழங்க திட்டமிடப்பட்டு இருக்கிறது. இதற்காக குழு அமைத்து மாவட்டம் வாரியாக பட்டியல் தயாரிக்கப் பட்டு வருகிறது.

### 100 உழவர் அங்காடிகள்

உழவர் சந்தையை போலவே விரைவில் 100 உழவர் அங்காடிகள் ரூ. 5 கோடி நிதியில் செயல் படுத்தப்பட இருக்கிறது. தற்போது இதற்கான பணி கள் விரைவுபடுத்தப்பட்டுள்ளது. கோவை, திருச்சி உள்ளிட்ட முக்கிய நகரங்களில் இதற்காக கடை கள் கட்டப்பட்டு வருகிறது.

இதுகுறித்து அதிகாரிகள் கூறும்போது, 'உழவர் சந்தைகளில் விற்பனை செய்யப்படுவதை போன்று தரமான வேளாண் விளைபொருட்கள் விவசாயிகளிடம் இருந்து நேரடியாக கொள்முதல் செய்யப்படும். இது தரம் பிரித்து, சிப்பம் கட்டி, முத் திரையிட்டு விற்பனை செய்யும் வகையில் 100 உழவர் அங்காடிகள் அமைக்கப்பட்டு வருகிறது என்றனர்.

தமிழ்நாட்டிற்கு

# கல்வி - இரயில்வே திட்டங்களுக்கான நிதியை வழங்காத ஒன்றிய அரசு!

## கன்னியாகுமரியில் துரை வைகோ எம்.பி. பேட்டி!

கன்னியாகுமரி, செப். 3-

கன்னியாகுமரியில் துரை வைகோ எம்.பி. அளித்த பேட்டி வருமாறு:-



ஒன்றிய அரசு கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே, தமிழகத்திற்கான 2023 -24ம் ஆண்டிற்கான கல்வி நிதி ரூ. 2,249 கோடி பாக்கி வைத்துள்ள நிலை யில். இவ்வாண்டு ஜூன் மாதத்திற்குள் தரவேண்டிய ரூ.500.00 கோடியை தராது காலம் தாழ்த்துவதால், தமி ழகத்தில் உள்ள ஆசிரியர் கள் 15,000ம் பேருக்கு மாத ஊதியம் கொடுக்க முடி யாத நிலையை ஏற்படுத்தி யுள்ளது.

ஒன்றிய கல்வி அமைச் சர் தர்மேந்திரா பிரதானை, தமிழக கல்வி அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யா மொழி உடன் சென்று தமி ழக நாடாளுமன்ற உறுப்பி னர்கள் சந்தித்து மனு கொடுத்தோம். மாணவர் களின், ஆசிரியர்களுக்கான இந்த நிதி குறித்து, ஒன்றிய கல்வி அமைச்சரிடம் கனி மொழி கருணாநிதி எம். பி.,வி.சி.க. தலைவர் திருமா வளவன் ஆகியோர் எடுத்து தெரிவித்தார்கள்.

ஒன்றிய கல்வி அமைச்சர் தெரிவித்த பதில் தேசிய கல்வி கொள்கையை ஆத ரித்து தமிழகம் கையெ ழுத்து இட்டால் நிதியை உடனே அனுமதிக்கிறோம் என்று தெரிவித்தார். இது குறித்து தமிழக கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி தெரிவித்துள்ள கருத்து இரண்டு திட்டங்களுக்கு வேறுபாடுகள் உள்ளன. ஒன்றிய அரசின் தேசிய கல்வி கொள்கையை, தமிழ கத்தை போன்று வேறு 5 மாநிலங்களும் ஏற்றுக் கொள்ளவில்லை என்பதை தெளிவு படுத்தியுள்ளார்.

அண்மையில் பழனியில் நடந்த முத்தமிழ் முருகன் தமிழ் கடவுள் என்ற விழாவை நான் வரவேற் கிறேன். அது ஒரு கலாச்சார விழா. இந்த விழாவில் பல் லாயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டனர். இது மதம் சார்ந்த விழா அல்ல. சகோதர மதங்களில். ரம் சான் நோன்பு, கிறிஸ்துமஸ் விழாவின் போது கேக் வெட்டுவது போன்று எல் லோரும் ஏற்றுக் கொண் டுள்ள விழா போன்றது பழ னியில் நடந்த முருகன் முத்தமிழ் விழா. ஒரு குறிப் பிட்ட இயக்கம் இந்து மதத் தினை சொந்தம் கொண்டா டுவதை இந்த விழா உடைத்துள்ளது.

இரயில்வே திட்டங் களுக்கு முழுமையான நிதியை தமிழகத்திற்கு ஒன் றிய அரசு வழங்கவில்லை. 12 ஆண்டு களுக்கு முன் பாக அறிவிக்கப்பட்ட திட் டங்கள் கூட கிடப்பில் கிடக்கிறது இதேபோல் மெட்ரோ ரயில் திட்டத்திற்கும் நிதி பங்க ளிப்பு இல்லை. பல்வேறு சிரமங்களுக்கு இடையே தான் மெட்ரோ ரயில் பணி நடைபெறுகிறது. தற்போது பல்வேறு பகுதிகளில் மெட்ரோ பணியால் சிர மம் ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு துரை வைகோ எம்.பி. குறிப்பிட்டார்.

# ஆளுநரின் அவதூறுக் கருத்து...

முதல் பக்கத் தொடர்ச்சி

இந்நிகழ்வில் தமிழ்நாடு அரசு பள்ளிக் கல்வித் துறையிலுள்ள ஆய்வக உதவி யாளர் பணியிடத்தில் பணிபுரியும் 4786 ஆய்வக உதவியாளர்களுக்கு ஏப்ரல் மற்றும் மே 2024 இல் பணியிடைப யிற்சி நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு பயிற்சி பெற்ற 3020 ஆய்வக உதவியாளர்களுக்கு பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய் யாமொழி கலந்துகொண்டு ஆய்வக உத வியாளர்களுக்கான பயிற்சி சான்றிதழ் வழங்கி பயிற்சி கட்டகத்தை வெளியிட்டு சிறப்புரையாற்றினார்.

பின்னர் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி செய்தியாளர்களிடம் கூறியதாவது:-

ஒருங்கிணைந்த கல்வி மூலமாக ஒன்றிய அரசு நிதி வழங்கிக் கொண்டுள் ளது. இந்த வருடம் நிதி ரூ. 2153 கோடி நிதியை வழங்கவில்லை இதனால் கேள் விக்குறியாக உள்ளது மாணவர்களின் கல்வி மற்றும் ஆசிரியர்களின் சம்பளம் உள்ளிட்டவை பாதிக்கப்படும்.

நாடாளுமன்ற தேர்தலுக்கு முன்பாக ஒன்றிய அமைச்சரை இரண்டு முறை சந்தித்து கருத்துகளை தெரிவித்தோம். இது குறித்து பார்த்து சொல்கிறோம் என கூறினார் மீண்டும் நாடாளுமன்ற தேர் தல் முடிந்த பின்பு சந்தித்து நிதி வர வில்லை என கூறினோம். நீங்கள் தேசிய கல்விக் கொள்கையில் கையெ முத்திட்டால் அரை மணி நேரத்தில் நிதி ஒதுக்குவதாகத் தெரிவித்தார்,

நாங்கள் 3 , 5 , 8 ஆம் வகுப்பு பொதுத் தேர்வு, மும்மொழி கொள்கை , குலக் கல்வி திட்டம் மறைமுகமாக கொண்டுவ ருவது உள்ளிட்ட பாதகங்களை கூறியும் நீங்கள் யோசித்துக் கூறுங்கள் என சொல்லிவிட்டார்.

இதை முதலமைச்சர் கவனத்திற்கு கொண்டு சென்றுள்ளோம். அவர் என்ன கூறுகிறாரோ அதை சார்ந்து எங்கள் நட வடிக்கை இருக்கும்.

ஆளுநர் மாநில பாடம் திட்டம் குறித்து கூறிய கேள்விக்கு பதிலளித்த அமைச்சர்

பள்ளி நூலகங்களில் டி.என்.பி.எஸ்.சி. போட்டி தேர்வுகள் ஆறாம் வகுப்பு முதல் பனிரெண்டாம் வகுப்பு வரை உள்ள மாநில பாடப் புத்தகத்தில் இருந்து தான் படிக்கின்றனர். யுபிஎஸ்சி முதற்கொண்டு மாநில பாட புத்தகத்தில் தான் படிக்கின்ற னர். வேண்டுமென்றால் ஆளுநரை அழைத்துச் சென்று போகிறேன். அங்கு போட்டித் தேர்வுக்கு படிக்கும் மாணவர்க ளிடம் அவரே கேள்வி கேட்கட்டும் என் றார்.



திருவள்ளூர் மத்திய மாவட்டம் திருவேற்காடு நகர திமுக சார்பில் பொது உறுப்பினர்கள் கூட்டம் நகரக் கழகச் செயலாளர் என்.இ.கே.மூர்த்தி ஏற்பாட்டில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் முன்னாள் அமைச்சரும் திருவள்ளூர் மத்திய மாவட்டக் கழகச் செயலாளர் ஆவடி சாமு.நாசர் எம்.எல்.ஏ, பல்வேறு ஆலோசனைகளை வழங்கி சிறப்புரையாற்றினார் உடன் மாநில மாவட்ட நிர்வாகிகள் கே.ஜெ. ரமேஷ், பிரபு கஜேந்திரன், சி.ஜெரால்டு, ம.ராஜி, பா.நரேஷ்குமார், த.எத்திராஜ். காஞ்சனாசுதாகர், சன். பிரகாஷ், ஏ.ஜெ.பவுல், பென்ஜமின், எஸ்.சங்கர், நடராஜன், பானுஅரசு, ஜெ.சரவணன், செல்வதுரை, பாண்டுரங்கன், காந்தி, இளங்கோவன், சத்தியகிரி, தெய்வசிகாமணி, பரிசமுத்து, பி.உமாபதி, பொன் மனோகரன், துரைகோபால், பி.வி.கே. கண்ணன், டி.குமார், கே.பி.எஸ்.சுதாகர், கெஜா, ராங்கதுரை, பா.பன்னீர் செல்வம், சாது, ஜெகன், உள்பட பலர் உள்ளனர்.